(2021)5 எஸ்சிஆர் 1

மல்லப்பா
–எதிர்–
கர்நாடகா மாநில அரசு

குற்றவியல் மேல்முறையீடு எண் 1993/2010

2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள்

(மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு. என்.வி. ரமணா
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. மனிருத்தா போஸ்)

தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 302 – கொலை – இறந்தவர் ஒரு தடியால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது – அரசுத்தரப்பு வழக்கானது முதன்மையாக அ.சா.5 (இறந்தவரின் மனைவி)இன் சாட்சியத்தின் அடிபடையிலானது – விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவர்– மேல்முறையீட்டாளர் மற்றம் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்தது – மேல்முறையீட்டாளரின் விடுதலை உயர் நீதிமன்றத்தால் எதிர்மறையாக்கப்பட்டது – மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பு எதிர்க்கப்பட்டது – முடிவு, சங்கதிகளின் அடிப்படையில், அ.சா.5 இன் சாட்சியத்தை முழுமையாக ஏற்கமுடியாது – மேல்முறையீட்டாளரை சம்பவ இடத்தில் பார்த்தது தொடர்பாக அ.சா.5 இன் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் உள்ளன – தாக்கப்பட்ட உண்மையான செயலுக்கு அ.சா.5 சாட்சியல்ல – சாட்சியாக அவர் நம்பப்படவில்லை – கைப்பற்றப்பட்ட தடி இறந்தவரை தாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட என்பதை குறிப்பிடும் கோர்வையான சாட்சியமில்லை – குற்றம் புரிந்ததற்கான சூழ்நிலைச் சான்றான, தாக்குதல் ஆயுதம்– தடி

ஏற்கப்படவில்லை – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அ.சா உடன் காணப்பட்டனர் என்பது அரசுத் தரப்பு வழக்காக இருந்தாலும், "ஒன்றியச் செயல்" என்னும் கோட்பாட்டை பயன்படுத்தி இ.த.ச., பிரிவு 302 இன் கீழ் மேல்முறையீட்டாளரை தண்டிப்பதற்கு அது ஒரு சிறிய சான்றாகும் – சங்கதிகளின் முதல் நீதிமன்றம் (விசாரணை நீதிமன்றம்) சாட்சியத்தை பரிசீலித்து, மேல்முறையீட்டாளரை விடுதலை செய்தது – அத்தகைய காண்முடிவை குற்றமாக மாற்றுவதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் (உயர்நீதிமன்றம்) தலையீட்டிற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய பெரிய குறைபாடுகள் எதுவும் இல்லை – அவ்வாறு விசாரணை நீதிமன்றத்தால் செய்யப்பட்ட மேல்முறையீட்டாளரின் விடுதலை உத்தரவு நிலைநிறுத்தப்படுகிறது.

சான்று – குற்றஞ்சாட்டப்பட்டவர் இருந்ததர்கான சாத்தியம் – பொறுந்துந்தன்மை – கொலை வழக்கு – சம்பவ இடத்திலிருந்து ஓடும்போது அச்த இடத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பார்த்ததாக மூன்று அ.சா.க்கள் சான்றுரைத்தனர் – முடிவு, தொடர்புடைய காலக்கட்டத்தில் அ.சா. இருந்த இடத்திலிருந்து சம்பவ இடம் காணக்கூடியதா என்பது தேவையற்றது என்ற பேரில் நிராகரிக்கமுடியாது .

சான்று – ஒன்றியச் செயல் – கொலை வழக்கு – குற்றம் சாட்டப்பட்டவர், மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடியபோது, அதே இடத்தில் இருந்ததாக மூன்று பி.வி.க்கள் சாட்சியமளித்தனர் – முடிவு: சங்கதிகளின்பேரில், குற்றஞ்சாட்டப்பட்ட இருவரும் அ.சா.ஆல் காணப்பட்டாலும், அது "ஒன்றியச் செயல்" என்ற கோட்பாட்டை

பயன்படுத்தி இ.த.ச., பிரிவு 302 இன் கீழ் மேல்முறையீட்டாளரை குற்றவாளியாகக் கருத மிகவும் அற்பமான ஒரு ஆதாரமாக இருக்கும் – கோட்பாடுகள் / கொள்கை – "ஒன்றியச் செயல்" எனும் கோட்பாடு – இ.த.ச., – பிரிவு 302.

சான்று – சூழ்நிலைச் சான்று – தாக்கப்பட்ட ஆயுதத்தை கைப்பற்றியது – கொலை – தடியால் தாக்கியதன் காரணமாக மரணம் ஏற்பட்டது – தடியின் கைப்பற்றுகை – விளைவு மற்றம் பொருந்தமை – முடிவு : தடி என்பது கிராமத்திலுள்ள வீடுகளில் சாதாரணமாக காணப்படும் பொருள் – கைப்பற்றப்பட்ட தடி இறந்தவரை தாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட ஒன்று என்பதை குறிப்பிடும் கோர்வையான சான்று இல்லை என்ற சங்கதிகள் – எனவே, தடி கைப்பற்றப்பட்ட சூழ்நிலை சான்று மூலம் அரசுத் தரப்பு குற்றம் புரியப்பட்டதை நிறுவியுள்ளதாக கோருகிறது – தாக்குதலுக்குரிய ஆயுதத்தை ஏற்கமுடியாது.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம்

முடிவு : 1. எங்கள் கருத்துப்படி, அ.சா.5 இன் சாட்சியம் முழுவதும் ஏற்கமுடியாத்து. சம்பவம் நடந்த இடத்தில் அவள் மேல்முறையீட்டாளரைப் பார்த்த்து குறித்து அ.சா.5 இன் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் இருந்தன. அவள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பார்க்கும் நேரத்தில் , அவர்கள் தேவேந்திரப்பா வீட்டின் முன் இருந்த்தாக அவளது குறுக்கு விசாரணையில் அவள் தெரிவித்துள்ளார். அது. அசா.3 மற்றும் அ.சா.6 இன் சாட்சியமாகும். இந்த வழக்கில் பொண்மை ஏதுமில்லாத்தால், அந்த பி.ஓ.வில் சம்பவம் நடந்த இரவில் ஹோனப்பா இருந்த்து குறித்து அவளது சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளை நாம் ஒதுக்கிவிடலாம். ஆனால் அவள் எங்கு எப்போது மேல்முறையீட்டாளரை சந்தித்தார் மற்றும் தாக்குதல் செயலை செய்யும்போது, அவரைப் பார்த்தாரா என்பது குறித்தும்

அவளது முரண்பாடான சாட்சியங்கள் முக்கியத்தும்பொறுகிறது. அவள் தனது முதல் விசாரணையில், அவள் தப் என்ற சத்தம் கேட்டு அவளது கண்களைத் திறந்தபோது அவளது கணவரின் தலையில் தடியால் எ.1 (மேல்முறையீட்டாளர்) அடித்துக்கொண்டிருப்பதை பார்த்ததாகவும் அப்போது எ.2 (வீரப்பா) அவன் அருகில் நின்று கொண்டிருந்த்தாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் நாங்கள் முன்னர் பார்த்தவாறு, அவளது குறுக்கு விசாரணையில் அவள் எழுந்த நேரத்தில், காயம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவித்துள்ளார். தேவேந்திரப்பா வீட்டு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பார்த்ததாக அவள் கூறுகிறார். அவளது குறுக்கு விசாரணையில் சொல்லப்பட்ட அவளது வாக்குமூலத்தின் பிறவற்றிலிருந்து பிறவாறு முரண் இல்லாமல் உள்ளது. இந்தப் பல்வேறு நோக்கில் உண்மையான தாக்குதலின் செயலுக்கு அவள் சாட்சியாக இல்லை என்கிற ஒரே ஒரு முடிவே சாத்தியமாகிறது. அவள் இறந்தவரின் விதவை ஆவார் மற்றும் கருணையுடன் பரிசீலிக்கப்பட உரியவராகிறார். ஆனால், சாட்சியாக நம்பிக்கையை ஊட்டவில்லை. (பத்தி 9)

2. அ.சா.5 யுடைய சாட்சியத்தைப் பார்க்கும்போது அவளது வீட்டிலிருந்து ஹுசைனம்மா மற்றும் தேவேந்திரப்பா ஆகியோரின் வீடுகளைப் பார்க்க இயலாது என்பதை விசாரணை நீதிமன்றம் கண்டுள்ளது. அதன் அடிப்படையில் அ.சா.3 மற்றும் அ.சா.5 இன் சாட்சியங்களை குறிப்பிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பு சாட்சிகளின் கூற்றுப்படி அவரது மகனுடன் ஓடிய மேல்முறையீட்டாளரைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு குறித்து உண்மையைக் கண்டறியும் விடையம் இதுவாக்கும் இருப்பினும் உயர் நீதிமன்றம் இந்த விடையம் குறித்து தீர்ப்புரையில் பத்தி 9 இல் முடிவைத்தந்துள்ளது. "முக்யத்துவம் அல்லாத" மற்றும் "சம்பந்தம் இல்லாத" சாட்சியத்தின் அடிப்படையில் மேற்சொன்ன

விடயம் கண்டறியப்பட்டுள்ளது என மேல்முறையீட்டிலுள்ள தீர்ப்புரையில் அதனை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது சரியென நாங்கள் கருதவில்லை. அந்த சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 இன் கூற்றினை, அவளது முரண்பாடான வாக்குமூலம் காரணமாக நாங்கள் நம்பவில்லை. அரசுத் தரப்பு கூற்றுப்படி, சம்பவ இடத்திலிருந்து ஓடியதைக் கண்டதாகவும், தடியை கண்டுபிடித்ததாகவும் அதே இடத்தில் மேற்சொன்ன மூன்று சாட்சிகளிலிருந்து மேல்முறையீட்டாளரின் ஈடுபாடு தோன்றுகிறது. அந்த பொருண்மை நேரத்தில் அ.சா.3 மற்றும் 6 இருந்த இடத்திலிருந்து இடம் பார்க்க முடிகிறதா என்ற சாட்சியம் சம்பந்தம் இல்லையென்று தள்ளிவிட முடியாது. (பத்திகள் 10, 11)

3. (அ.சா.2)இன் வாக்குமூலத்தின் பகுதியை ஏற்கெனவே நாங்கள் தந்துள்ளோம், அதில் கைப்பற்றுதல் சாட்சி தடி உடையவில்லை எனக் கூறியுள்ளார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 20, ஏப்ரல் 1999 காலை காவல் துறையால் செய்யப்பட்டதை நிகழ்விட பஞ்சநாமாவை அ.சா.1 வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தடியின் உடைக்கப்பட்ட துண்டு குறித்து அவர் ஏதும் கூறவில்லை. பிறகு மர தடியின் சிறுதுண்டைக் கைப்பற்றியதை அவரது சாட்சியத்தில் அ.சா.8 விசாரணை அதிகாரி கூறிய வாக்குமூலத்தை இந்த இரு அரசுத் தரப்பு சாட்சிகளும் ஆதரிக்கவில்லை. சடலக்கூறாய்வு மருத்துவர் ஓய். வெங்கடேஷ் (அ.சா.7) இடம் தடிகைக் காட்டவில்லை. அவரது வாக்குமூலத்திலிருந்து அவ்வாறு வெளியாகவில்லை. இந்த நாட்டில் கிராமப்புற வீடுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படும் பொதுவான கருவி தடியாகும் மற்றும் இறந்தவரைத் தாக்க, கைப்பற்றப்பட்ட தடி பயன்படுத்தப்பட்டது எனக் காட்ட வலுவான சாட்சியம் இல்லாத நிலையில், தாக்கிய ஆயுதம்

கைப்பற்றப்பட்டது என்கிற சூழ்நிலை சாட்சியத்தால் குற்றம் நடந்துள்ளது என நிரூபிக்கமுயலும் அரசுத் தரப்பு வாதம் தோல்வியுறுகிறது. (பத்தி 12)

4. சம்பவம் நடந்த நேரத்தில் அவர்களது உரிய இடங்களிலிருந்து தேவேந்திரப்பாவின் வீட்டுமுன்பாக மேல்முறையீட்டாளர் ஓடியுள்ளதை அ.சா.3, அ.சா.5 மற்றும் அ.சா.6 பார்த்தார்கள் மற்றும் பார்த்திருக்கக்கூடும் என்கிற அரசுத் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொண்டாலும்கூட எங்கள் முன் அளிக்கப்பட்ட சாட்சியமானது இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் ஓடிப்போனதைப் பார்த்தது என்பதுதான் "தொடர் செயல் கோட்பாட்டைப்" பொருத்தினாலும், இ.த.ச., பிரிவு 302 இன் கீழ் ஒருவரைக் குற்றவாளியாகக் அது மிக மெலிதான சாட்சியமாகவே அமையக்கூடும். விடையங்களின் முதல் நீதிமன்றம், சாட்சியங்களைப் பரிசீலித்து மேல்முறையீட்டாளரை விடுதலை செய்துள்ளது. குற்றம் குறித்த அத்தகைய முடிவை மாற்றுவதற்காக மேல்முறையீட்டு நீதிமன்றம் தலையிடக் கோரும் பெழும் வெற்றிடம் எதையும் நாங்கள் காணவில்லை. அவ்வாறே மேல்முறையீட்டாளரை விடுதலை செய்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு நிலைநிறுத்தப்படுகிறது. (பத்திகள் 13, 14)

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 1993/2010.

பெங்களூரிலுள்ள கர்நாடகா உயர் நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண் 1232/ 2001 இல் 11.06.2008 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

வழக்குரைஞர்கள்:

திரு. எஸ்.என். பத் ... மேல்முறையீட்டாளர்

திரு. வி.என். ரகுபதி ... எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ் அவர்கள்

1. மேல்முறையீட்டாளர் (மல்லப்பா) , 1999 ஏப்ரல் 19 – 20 தேதியன்று நள்ளிரவுக்கு மேல் அவரது சகோதரர் யரப்பாவை படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார். அவரது மகன் வீரேஷ் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவராவார். இந்திய தண்டனைச் சட்டத்தின் (சுருக்கமாக சட்டம்) பிரிவு 302 உடணிணைந்த பிரிவு 34 ஆகியவற்றின் கீழ் இருவரையும் அனைத்த குற்றச்சாட்டுகளிலிருந்து விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்தது. விடுதலைத் தீர்ப்பை எதிர்த்து, கர்நாடகா அரசு செய்த மேல்முறையீட்டில் மல்லப்பாவைப் பொறுத்தவரை கர்நாடகா மாநில உயர் நீதிமன்றம், வசாரணை நீதிமன்றத்தின் முடிவை நீக்கறவு செய்து, சட்டப் பிரிவு 302 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அவருக்கு தண்டனை விதித்தது. அவருக்கெதிராக ஆயுட்கால தண்டனை வழங்கப்பட்டது. 11.06.2008 இல் வழங்கப்பட்ட குற்றத் தண்டனை மற்றும் உத்ரவை எதிர்த்து மல்லப்பாவால் தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடகா மாநிலத்தின் சிந்தனூர் தாலுகாவில் சித்ரம்பூர் கிராமத்தில் உள்ள அவரது வீட்டின் 'அங்காலா' வில் (முன்தாழ்வாரத்தில்) இறந்துபோன ஈரப்பா தூங்கிக்கொண்டிருந்தபோது மேல்முறையீட்டாளர் (விசாரணையில் ஏ.1 ஆக விவரிக்கப்பட்டவர் மற்றும் அவரது மகனான ஏ–

2 தடியால் தாக்கப்பட்டார் என்ற அரசுத் தரப்பு வாதம் உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. மேல்முறையீட்டாளருக்கும், இறந்த பாதிக்கப்பட்டவருக்கும் இடையே, சில அசையா சொத்துக்கள் மற்றும் கால்வாய் நீர் பகிர்வு குறித்து முன்விரோதம் இருந்தது. அதுவே குற்றத்தின் நோக்கமாக அரசுத்தரப்பால் முன்நிறுத்தப்பட்டது. தாக்குதல் நடத்தும்போது, அவரது மனைவியான பஸவம்மா (அ.சா.5) அவரது இரண்டு மகன்களுடன் சிறிது தூரத்தில் அவரது வீட்டில் முன்தாழ்வாரத்தில் இறந்துபோனவர் தூங்கிக்கொண்டிருந்ததாக அரசுத் தரப்பு சாட்சியங்களிலிருந்து தோன்றுகிறது. அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோரின் அலரலைக்கேட்டு, இறந்துபோனவரின் மற்றுமொரு சகோதரர் சிவராயப்பா (அ.சா.3) விழித்து மற்றும் இரு குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் ஓடுவதைப் பார்த்துள்ளார். அ.சா.3 இன் சாட்சியத்தின்படி இறந்துபோனவர் உறங்கிக்கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் அவரது வீட்டில் வெளியே 'அங்காலா'–வில் அவர் உறங்கிக்கொண்டிருந்துள்ளார். நாம் இதனை சம்பவம் நடந்த இடம் என (பி.ஓ) விவரிக்கலாம். இறந்தவர் உறங்கிக்கொண்டிருந்த சம்பவ இடத்தை நெருங்கியபோது, அவரது மூக்கு மற்றும் காதிலிருந்து ரத்தம் வழுவதை அவர் அறிந்துகொண்டார். பின்னர் அவரது சகோதரியின் கணவரான அதே ஈரப்பா என்ற பெயரிலுள்ள அ.சா.1 இன் வீட்டிற்கு விரைந்துள்ளார். அந்த அ.சா.1 இன் வீட்டிலிருந்து, அவர் சென்று உள்ளூர் மருத்துவர் (அ.சா.4) மல்லிகார்ஜுனாவை சம்பவ இடத்திற்கு அழைத்து வந்துள்ளார். இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், அ.சா.1, அ.சா.3 மற்றும் பசப்பா ஒரு ஜீப்பை ஏற்பாடு செய்து சம்பவத்தைத் தெரிவிக்க சிந்தனூர் காவல் நிலையத்திற்கு சென்றுள்ளார். புகாரை அந்த காவல் நிலைய பி.எஸ்.ஐ–ஆக பதிவு செய்த சன்னா ஹாசன்

சாகேப் (அ.சா.8) வாக்குமூலத்தின் அடிப்படையில் மு.த.அ. பதிவு செய்யப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 அன்று காலை 4 மணிக்கு அவர்கள் காவல் நிலையத்தை அடைந்ததாக அதுகாட்டுகிறது.

3. அதிர்ச்சியினாலும், கபால உள் ரத்தக் கசிவினாலும், ஈரப்பாவின் மரணம் சம்பவித்துள்ளது என சடலக்கூராய்வு அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஓய் வெங்கடேஷ் (அ.சா.7)இன் சாட்சியம் உள்ளது. வலது பின் மண்டை விக்கம் 3x 1/2 "ஆக கிழிந்து காயமான வெளிக்காயத்தினை அவர் கண்டுள்ளார். அத்தகைய காயம் இரும்புத் தடி அல்லது தடி மூலம் ஏற்பட்டிருக்கக்கூடும் என அவரது முதல் விசாரணையிலிருந்து அவரது கருத்து காணப்படுகிறது. இருப்பினும் குறுக்கு விசாரணையில், ஒரு நபர் கீழே ஒரு உறுதியான தளத்தில் விழுந்தாலும் அத்தகைய காயத்துக்கு வாய்ப்பு உண்டு எனத் தெரிவித்துள்ளார்.

4. கண்ணுற்ற சாட்சியாக முன்வைக்கப்பட்ட அ.சா.5 இன் சாட்சியத்தின் மீது முதன்மையாக அரசுத் தரப்பு எழுந்துள்ளது மற்றும் அ.சா.3 மற்றும் போகப்பா (அ.சா.6) வாக்குமூலங்கள், நிகழ்வுக்குப்பின் சாட்சியமாக இரண்டும் தரப்பட்டுள்ளன. மேல்முறையீட்டாளர் ஓடுவதைப் பார்த்ததாக கூறுகிறார்கள், மேலும் அவர்கள் மேல்முறையீட்டாளரை பார்த்ததாக கூறும் இடமானது ஜீரல் தேவந்திரப்பா (அ.சா.6)வின் வீட்டின் முன்பகுதியாகும். அ.சா.5 தனது முதன்மை விசாரணையில், எ1 தனது இறந்த கணவரின் தலையில் தடியைக்கொண்டு தாக்கியதை பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆயினும் குறுக்கு விசாரணையின்போது தேவேந்திரப்பாவின் வீட்டருகே குற்றஞ்சாட்டப்பட்டவரை கண்டதாக அவர் வேறொரு கூற்றை கூறினார். நாம் அவரது சாட்சியம் குறித்து பின்வரும் பத்தியில் விளக்கமாக பார்க்கலாம். அரசுத் தரப்பு தங்களது வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு எதிராக நிரூபிக்கவேண்டிய மற்றொரு

சங்கதி யாதெனில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதமான தடியாகும். விசாரணை நடத்திய அ.சா.8 தமது வாக்குமூலத்தில், பிற சில பொருள்களான பர்கா, தலையணை (பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் படி கிழிந்து விழுந்த தலையணை, ஜம்கானா ரத்தக்கறைபடிந்த மண் மற்றும் மாதிரி மண் ஆகியவற்றுடன் சம்பவ இடத்தில் சிறுதுண்டு தடி எனத் தெரிவித்துள்ளார். இது மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. தடி சான்று பொருள் (சா.பொ.) 6 ஆகும். சிறிய மரத்துண்டு சா.பொ.10 ஆக குறியீட செய்யப்பட்டுள்ளது.

5. பசம்மா (அ.சா.5) அவரது முதல் விசாரணையின்போழ, 1999, ஏப்ரல் 19 முதல் 20 வரை நல்லிரவுக்கு பின்னர், அவர் சந்தம் ஒன்றை கேட்டதாக கூறினார், அதை அவர் துப் என்று விளக்கினார். அது சத்த்துடன் விழுந்த அடியாக ஒலியை விவரிப்பதாகத் தோன்றுகிறது. அவளது முதல் விசாரணையில், ஹோனப்பா மற்றும் நாகராஜன் அவர்களது மகன்கள் அவளது கணவனுடன் தூங்கிக்கொண்டிருந்த்தாகவும் அவள் தெரிவித்துள்ளார், அந்த சத்தம் கேட்டு, அவள் சத்தம் இட்டுளார் மற்றும் அவள் கண்களைத் திறந்தபோது, வீரப்பா (ஏ 2) அவனுக்குப் பின்புறம் நிற்க, மேல்முறையீட்டாளர் மல்லப்பா ஒரு தடியால் அவரது கணவரின் தலையில் அடித்துக்கொண்டிருப்பதை அவள் பார்த்துள்ளாள். அவளது குறுக்கு விசாரணையில், அவள் சிந்தனூரில் இருந்த்தால் ஹோனப்பா அவர்களுடன் தூங்கவில்லை என்று அவள் கூறியுள்ளார். அவளது மகள்கள் ஈரம்மா மற்றும் கங்கம்மா அவர்களுடன் தூங்கியுள்ளனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பார்த்த்து குறித்து, அவளது குறுக்கு விசாரணையில், அவள் விழித்துக்கொண்டு, அவளது கணவரைப் பார்க்கும்போது, காயங்கள் ஏற்பட்டுவிட்டன என அவளது கூற்றை

மாற்றிக்கூறியுள்ளார். தேவேந்திரப்பாவின் வீட்டருகே குற்றஞ்சாட்டப்பட்டவர் ஓடுவதைப் பார்த்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கிய ஆயுதமான தடி குற்ற சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக காவல் துறையால் கோரப்பட்ட உடைந்த துண்டுடன் மேல்முறையீட்டாளரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட மரத்துண்டான உடைந்த துண்டுடன் பொருத்தி அரசுத் தரப்பு நிரூபிக்க கோரியுள்ளது.

6.விசாரணை நேரத்தில் கைப்பற்றப்பட்டதற்காக சாட்சியாக உள்ள அ.சா.2 சீனிவாஸ் அவனது முதல் விசாரணையில் கூறியதாவது :–

> "…..அந்த இடத்திலிருந்து, இரத்தம் தோய்ந்த மண் பர்க்கா, தலையணை மற்றும் ஜம்கானா ஆகியவற்றை சேகரித்து, அவற்றை கைப்பற்றினர். என்னுடன் விருபண்ணா மகஜரில் கையொப்பமிட்டுள்ளார். சா.ஆ.பி.2 கைப்பற்றுதல் மகஜர் அதில் என் கையொப்பம் உள்ளது. சா.பொ.1 பர்கா, சா.பொ.2 தலையணை மற்றும் சா.பொ.3 ஜம்கானா ஆகும். சா.பொ.4 இரத்தம் தோய்ந்த மண், சா.பொ.5 மண்மாதிரி. அது அந்த இடத்தில் சேகரிக்கப்பட்டது.
>
> 2. அடுத்து ஏ.1 இன் வீட்டிலிருந்து சமையலறையில் அடுப்புக்கு அருகில் சென்று, காவல் துறை ரத்தக் கறையுடைய தடியைக் கைப்பற்றியுள்ளது. சா.ஆ.பி.3 தடியைக் கைப்பற்றிய மகஜர். அதில் என் கையொப்பம் உள்ளது. சா.பொ.6, ஏ.1 வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தடி. அந்த நேரத்தில் ஏ 1–இன் மகள் ஏ.2 அந்த வீட்டில் இருந்தார். பிற மகளிரும்கூட அங்கிருந்தனர். சா.ஆ.பி.3 தடி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள கைப்பற்றப்பட்ட தடியாகும். அதில் எனது கையொப்பம் உள்ளது. சா.பொ.6, எ.1 இன் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தடி. அந்த நேரத்தில் எ.1 இன் மகன் எ 2 அந்த வீட்டிலிருந்தார். பிற மகளிரும்கூட அங்கிருந்தனர். சா.ஆ.பி.3

குண்டாந்தடி கைப்பற்றிய மகஜர். அதில் எனது கையொப்பம் உள்ளது. சா.பொ.6 தடி, எ.1 இன் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட தடி. அந்த நேரத்தில், வீட்டில் எ.1 இன் மகன் எ.2 இருந்தார். பிற மகளிரும் கூட அங்கிருந்தனர்."

(பிறழாமல் அவ்வாறே கூறப்பட்டுள்ளது)

மேலும், அவரது குறுக்கு விசாரணையில் அவர் மேலும் தெரிவித்தது

"இறந்தவர் இறந்த இடத்தில் பஞ்ச நாமா எழுதப்பட்டுள்ளது என அங்கு நான் சென்றபோது என்னிடம் பி.எஸ்.ஐ. கூறினார் மற்றும் அவ்வாறு நான் கையொப்பமிட்டேன் மற்றும் எந்த காரணத்திற்காக மகஜர் ஏற்பட்டது என்பது என்னால் சொல்லமுடியாது. அந்த இடத்தில் மூன்று மகஜர்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து மூன்று பஞ்சநாமாக்களும் எத் காரணத்திற்காக அங்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் சொல்லமுடியாது. அதே இடத்தில் அனைத்து பஞ்சநாமாக்களிலும் நான் கையொப்பமிட்டுள்ளேன். காவல் துறையினர் அந்த பஞ்சநாமாக்களை ஏற்கெனவே எழுதியிருந்தனர். இந்த எல்லா பஞ்சநாமாகளிலும் என்ன எழுதியுள்ளது என்பது எனக்குத் தெரியாது. " (பிறழாமல் அவ்வாறே கூறப்பட்டுள்ளது)

அவரது குறுக்கு விசாரணையில், தடி உடையவில்லை என அவர் குறிப்பாகக் கூறியுள்ளார்.

7. காவல் துறையினர் முன்பு கூறாதவற்றை அ.சா.3 மற்றும் அ.சா.5 அரசுத் தரப்பை விரித்துக் கூறியதாக விசாரணை நீதிமன்றம் கண்டுள்ளது. அ.சா.3 மற்றும் அ.சா.5 இன் சாட்சியங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளதையும் அரசுத் தரப்பு நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டுள்ளதையும் விசாரணை நீதிபதிகள் கண்டுள்ளனர். ஈரப்பா, இறந்தவரைத் தாக்கி, கெலை

செய்ததாகக்கூறும் அரசுத் தரப்பின் நிலைபாட்டை அவர் ஏற்கக்கூடியதாக இல்லை. விசரணை நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னால் உள்ள பிற காரணிகள் யாதெனில், சம்பவ இடத்திலிருந்து தேவேந்திரப்பாவின் வீடு பாரக்கமுடியாமல் உள்ளதாகும். மேலும் தாக்குதல் செய்த ஆயுதம் சடலக்கூராய்வு மருத்துவர் முன்பு காட்டப்பட்டவில்லை மற்றும் சா.பொ.6 மற்றும் சா.பொ.10 ஒரே தடியினுடையது என்பதை பொருத்திப் பார்த்து கருத்து பெற எந்த வல்லுநரிடமும் அது அனுப்பப்படவில்லை.

8. மாநில அரசின் மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது

"9. ஹுசைனம்மா மற்றும் ஜீரால் தேவேந்திரப்பா அருகருகில் உள்ளன மற்றும் அவர்களுடைய வீட்டிலிருந்து மேற்சொன்ன வீடுகள் தெரியாது என அ.சா.3 மற்றும் அ.சா.6 இன் சாட்சியம் கூறுகிறது. ஜீரல் தேவேந்திரப்பாவின் வீடு, அ.சா.3 மற்றும் அ.சா.6 இன் வீட்டிலிருந்து தெரியுமா என்பது முக்கியமும், சம்பந்தமும் உடையதல்ல.ஜீரல்தேவேந்திரப்பாவின் வீடு, அ.சா.5 வீட்டிலிருந்து தெரியாது என்ற விளைவுக்கு மேற்சொன்ன சாட்சியம் எடுத்துக்கொள்ளப்படமுடியாது. எனவே, ஜீரல்தேவேந்திரப்பாவின் வீட்டருகே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சென்றுள்ளதை அவள் காணமுடிந்த்து என்ற விறைவை ஏற்படுத்தும் அ.சா.5 இன் சாட்சியத்தை நிராகரிக்க எந்தக் காரணமும் இல்லை.

10. குற்றம் நடந்த உள்நோக்கத்தை அரசுத் தரப்பு நிறுவியுள்ளது. அ.சா.5 இன் சாட்சியம் முழுதும் நம்பிக்கைக்குரியது. ஒரே ஒரு கிழிந்த தலைக்காயம் உள்ளது. ஒரே இடத்தில் இரு அடியும் விழுந்திருக்க வாய்ப்புள்ளது. அந்த நிலையில் ஒரே ஒரு காயம் இருக்கக்கூடும்.

11. ஏ.1 தான் அடித்துவிட்டு அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார் என அ.சா.5 கோரியுள்ளார். எ.2–ம் ஓடிவிட்டார் என் அவர் கோரியுள்ளார். எ 2 இன் ஓடிப்போகும் செயலை, எ 2 இன் தரப்பில் பொதுவான நோக்கத்தைப் பகிர்வதாகக் கருத முடியாது.அ.சா.5 இன் சாட்சியம் எ.1 இன் குற்றதை நன்று நிரூபிக்கிறது.

12. இந்த விடையத்தை பார்க்கும்போது எ.1–க்கு எதிராக விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட விடுதலை உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. எ.2 க்கு வழங்கப்பட்ட விடுதலை உத்தரவு உறுதி செய்யப்படுகிறது.

(பிறழாமல் அவ்வாறே கூறப்பட்டது)

9. ஆயினும் எங்கள் கருத்துப்படி, அ.சா.5 இன் சாட்சியம் முழுவதும் ஏற்கமுடியாது. சம்பவம் நடந்த இடத்தில் அவள் மேல்முறையீட்டாளரைப் பார்த்து குறித்து அ.சா.5 இன் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் இருந்தன. அவள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பார்க்கும் நேரத்தில் , அவர்கள் தேவேந்திரப்பா வீட்டின் முன் இருந்த்தாக அவளது குறுக்கு விசாரணையில் அவள் தெரிவித்துள்ளார். அது. அசா.3 மற்றும் அ.சா.6 இன் சாட்சியமாகும். இந்த வழக்கில் பொண்மை ஏதுமில்லாத்தால், அந்த பி.ஓ.வில் சம்பவம் நடந்த இரவில் ஹோனப்பா இருந்த்து குறித்து அவளது சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளை நாம் ஒதுக்கிவிடலாம். ஆனால் அவள் எங்கு எப்போது மேல்முறையீட்டாளரை சந்தித்தார் மற்றும் தாக்குதல் செயலை செய்யும்போது, அவரைப் பார்த்தாரா என்பது குறித்தும் அவளது முரண்பாடான சாட்சியங்கள் முக்கியத்தும்பொறுகிறது. அவள் தனது முதல் விசாரணையில், அவள் தப் என்ற சத்தம் கேட்டு அவளது கண்களைத் திறந்தபோது அவளது கணவரின் தலையில் தடியால் எ.1 (மேல்முறையீட்டாளர்) அடித்துக்கொண்டிருப்பதை பார்த்ததாகவும்

அப்போது எ.2 (வீரப்பா) அவன் அருகில் நின்று கொண்டிருந்த்தாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் நாங்கள் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அவளது குறுக்கு விசாரணையில் அவள் எழுந்த நேரத்தில், காயம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவித்துள்ளார். தேவேந்திரப்பா வீட்டு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பார்த்ததாக அவள் கூறுகிறார். அவளது குறுக்கு விசாரணையில் சொல்லப்பட்ட அவளது வாக்குமூலத்தின் பிறவற்றிலிருந்து பிறவாறு முரண் இல்லாமல் உள்ளது. இந்தப் பல்வேறு நோக்கில் உண்மையான தாக்குதலின் செயலுக்கு அவள் சாட்சியாக இல்லை என்கிற ஒரே ஒரு முடிவே சாத்தியமாகிறது. அவள் இறந்தவரின் விதவை ஆவார் மற்றும் கருணையுடன் பரிசீலிக்கப்பட உரியவராகிறார். ஆனால், சாட்சியாக நம்பிக்கையை ஊட்டவில்லை.

10. அ.சா.5 யுடைய சாட்சியத்தைப் பார்க்கும்போது அவளது வீட்டிலிருந்து ஹுசைனம்மா மற்றும் தேவேந்திரப்பா ஆகியோரின் வீடுகளைப் பார்க்க இயலாது என்பதை விசாரணை நீதிமன்றம் கண்டுள்ளது. அதன் அடிப்படையில் அ.சா.3 மற்றும் அ.சா.5 இன் சாட்சியங்களை குறிப்பிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது:–

> "மேலே குறிப்பிட்டவாறு, அவளது வீட்டிலிருந்து ஹுசைனம்மா மற்றும் தேவேந்திரப்பா ஆகியோரின் வீடுகளை காணமுடியாது என்பதை அ.சா.5 ஒப்புக்கொள்கிறார், அதன்படி, அந்தப் பகுதியிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவரை பார்த்தது குறித்த அவர்கள் கூற்று உண்மையில்லை."
>
> (பிறழாமல் அவ்வாறே கூறப்பட்டுள்ளது)

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் கூற்றுப்படி அவரது மகனுடன் ஓடிய மேல்முறையீட்டாளரைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு குறித்து உண்மையைக் கண்டறியும் விடையம் இதுவாக்கும் இருப்பினும் உயர் நீதிமன்றம் இந்த

விடையம் குறித்து தீர்ப்புரையில் பத்தி 9 இல் முடிவைத்தந்துள்ளது. "முக்யத்துவம் அல்லாத" மற்றும் "சம்பந்தம் இல்லாத" சாட்சியத்தின் அடிப்படையில் மேற்சொன்ன விடயம் கண்டறியப்பட்டுள்ளது என மேல்முறையீட்டிலுள்ள தீர்ப்புரையில் அதனை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது சரியென நாங்கள் கருதவில்லை. அந்த சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 இன் கூற்றினை, அவளது முரண்பாடான வாக்குமூலம் காரணமாக நாங்கள் நம்பவில்லை. அரசுத் தரப்பு கூற்றுப்படி, சம்பவ இடத்திலிருந்து ஓடியதைக் கண்டதாகவும், தடியை கண்டுபிடித்ததாகவும் அதே இடத்தில் மேற்சொன்ன மூன்று சாட்சிகளிலிருந்து மேல்முறையீட்டாளரின் ஈடுபாடு தோன்றுகிறது. அந்த பொருண்மை நேரத்தில் அ.சா.3 மற்றும் 6 இருந்த இடத்திலிருந்து இடம் பார்க்க முடிகிறதா என்ற சாட்சியம் சம்பந்தம் இல்லையென்று தள்ளிவிட முடியாது.

12. ஸ்ரீநிவாஸ் (அ.சா.2)இன் வாக்குமூலத்தின் பகுதியை ஏற்கெனவே நாங்கள் தந்துள்ளோம், அதில் கைப்பற்றுதல் சாட்சி தடி உடையவில்லை எனக் கூறியுள்ளார். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 20, ஏப்ரல் 1999 காலை காவல் துறையால் செய்யப்பட்டதை நிகழ்விட பஞ்சநாமாவை அ.சா.1 வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தடியின் உடைக்கப்பட்ட துண்டு குறித்து அவர் ஏதும் கூறவில்லை. பிறகு மர தடியின் சிறுதுண்டைக் கைப்பற்றியதை அவரது சாட்சியத்தில் அ.சா.8 விசாரணை அதிகாரி கூறிய வாக்குமூலத்தை இந்த இரு அரசுத் தரப்பு சாட்சிகளும் ஆதரிக்கவில்லை. சடலக்கூறாய்வு மருத்துவர் ஓய். வெங்கடேஷ் (அ.சா.7) இடம் தடிகைக் காட்டவில்லை. அவரது வாக்குமூலத்திலிருந்து அவ்வாறு வெளியாகவில்லை. இந்த நாட்டில் கிராமப்புற வீடுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படும் பொதுவான கருவி தடியாகும் மற்றும்

இறந்தவரைத் தாக்க, கைப்பற்றப்பட்ட தடி பயன்படுத்தப்பட்டது எனக் காட்ட வலுவான சாட்சியம் இல்லாத நிலையில், தாக்கிய ஆயுதம் கைப்பற்றப்பட்டது என்கிற சூழ்நிலை சாட்சியத்தால் குற்றம் நடந்துள்ளது என நிரூபிக்கமுயலும் அரசுத் தரப்பு வாதம் தோல்வியுறுகிறது.

13. சம்பவம் நடந்த நேரத்தில் அவர்களது உரிய இடங்களிலிருந்து தேவேந்திரப்பாவின் வீட்டுமுன்பாக மேல்முறையீட்டாளர் ஓடியுள்ளதை அ.சா.3, அ.சா.5 மற்றும் அ.சா.6 பார்த்தார்கள் மற்றும் பார்த்திருக்கக்கூடும் என்கிற அரசுத் தரப்பு வாதத்தை ஏற்றுக்கொண்டாலும்கூட எங்கள் முன் அளிக்கப்பட்ட சாட்சியமானது இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் ஓடிப்போனதைப் பார்த்தது என்பதுதான் "தொடர் செயல் கோட்பாட்டைப்" பொருத்தினாலும், இ.த.ச., பிரிவு 302 இன் கீழ் ஒருவரைக் குற்றவாளியாகக் அது மிக மெலிதான சாட்சியமாகவே அமையக்கூடும். விடையங்களின் முதல் நீதிமன்றம், சாட்சியங்களைப் பரிசீலித்து மேல்முறையீட்டாளரை விடுதலை செய்துள்ளது. குற்றம் குறித்த அத்தகைய முடிவை மாற்றுவதற்காக மேல்முறையீட்டு நீதிமன்றம் தலையிடக் கோரும் பெழும் வெற்றிடம் எதையும் நாங்கள் காணவில்லை.

14. மேல்முறையீட்டாளருக்கு குற்றத் தண்டனை வழங்கியும் மற்றும் தொடர்ச்சியாக சிறைத் தண்டனையும் குற்றவியல் மேல்முறையீடு எண் 1232/2001 இல் கர்நாடகா உயர் நீதிமன்றத்தால் 11 ஜூன், 2008 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை இந்த காரணங்களுக்காக நாங்கள் நீக்கறவு செய்கிறோம். விசாரணை நீதிமன்றத்தால் மல்லப்பா (எ.1) க்கு வழங்கப்பட்ட விடுதலை தீர்ப்பை நாங்கள் நிலைநிறுத்துகிறோம். இந்த நீதிமன்றத்தால் 29 ஜனவரி 2016 இல் மேல்முறையீட்டாளரின் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பதையும், மேல்முறையீட்டாளின் பிணைக்

கோரிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பதிவுறுகளிலிருந்து நாங்கள் அறிவதால், பிணைமுறிகளை நீக்குகிறோம்.

15. மேற்சொன்ன வரையறைகளின்படி, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள், ஏதேனும் இருப்பின், அது தீர்வு செய்யப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."